ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
அதிரடிப் பாய்ச்சல்
பெண்
மாயாவி
ரூ.5

ராணி காமிக்ஸ் – 450
(மாதம் இருமுறை)

மார்ச் 16, 2003.

முகமூடி வீரர் மாயாவி

தோன்றும்

பெண் மாயாவி


வங்கி
டுமீல்...
நகர வங்கி ஒன்றில்
பட்டப்பகலில் கொள்ளை!


காவலாளி சுட்டுக் கொல்லப்பட்டார்!
திருடன்...
திருடன்...
ரிங்...


காவலாளிகள் கொள்ளையரைத் துரத்தி வந்தார்கள்.
சுட்டுத் தள்ளுங்கள்!


சுட்டு வீழ்த்தி விட்டோம்!
போலீஸ் வரக்கூடும்! காட்டுக்குள் போ!!


அதேநேரம் காட்டில்...
என் விடுமுறை இனிமையாகக் கழிகிறது!
டயானா! இன்று ஒருநாள் மட்டும் நான் வெம்பசிக்குப் போய் வரவேண்டும்! அங்கே திருவிழா நடக்கிறது!


டா... டா... டயானா!


விடுமுறையைக் கழிக்க டயானா காட்டுக்கு வந்திருந்தாள்.
தனியேவிட்டுப் போய்விட்டாரே... போர் அடிக்கிறது... என்ன செய்யலாம்!

வெம்பசியில்—
அழாதே! இன்று திருவிழா! முகமூடி வேறு வருகிறார். சுத்தமாக இருக்க வேண்டாமா?


மாயாவி வெம்பசிக்கு வந்து சேர்ந்தார். பூசாரி வரவேற்றார்.
வெம்பசியில் எல்லோரும் நலந்தானே?
நீங்கள் இருக்கும்போது எங்களுக்கு என்ன குறை? உங்களுக்காக எல்லாரும் காத்திருக்கிறார்கள்!


ஒரு நீண்ட குகைக்குள் மாயாவி நுழைந்தார்!
ஏன் குகை வழியே போகிறோம்?
அதில் ஒரு வேடிக்கை இருக்கிறது!


ஒரு மேடை. அங்கே வெம்பசி மக்கள் கூடியிருந்தார்கள்!
எல்லோரும் ஜோரா கை தட்டுங்க! இப்போது இந்த மேடையில் மாயாவியை வரவழைக்கப் போகிறேன்!

மேடையில் குபுகுபு என்று புகை எழுந்தது!
புகை நடுவே மாயாவி தோன்றினார்!
ஆ... மாயாவி... மாயாவி...!

உங்கள் எல்லோரையும் பார்ப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!
உங்களைப் பார்ப்பதில் எங்களுக்கும் மகிழ்ச்சியே! வாருங்கள், திருவிழாவுக்குப் போவோம்!

மண்டை ஓட்டுக் குகையில்...
நான் மாயாவியாக மாறினால் என்ன? வேடிக்கையாக இருக்குமே!


மாயாவியின் உடைகளை எடுத்து டயானா அணிந்துகொண்டாள்!
நான் காட்டுக்குள் போவேன். ஒரே வேடிக்கையாக இருக்கும்!

அதேநேரம்... வங்கிக் கொள்ளையர்கள் காட்டுக்குள் வந்தார்கள்.
என்ன கனம்... எவ்வளவு தூரம் தூக்கிப் போவது?
அடர்ந்த காட்டுக்குள் போய்விடலாம். அப்போதுதான் யாருக்கும் தெரியாது!


இங்கே
புதைக்கலாம்.
ஏன் புதைக்க
வேண்டும்?
போலீசில் இருந்து
தப்பத்தான்!
கொள்ளையைப்
பற்றிப் போலீசார்
மறந்தபின் நாம் வந்து
எடுத்துக்கொள்ளலாம்!

மாயாவி போலவே
இருக்கிறேன்! நான் பெண்
மாயாவி!!


இந்தக் குதிரைகூட
என்னை
மாயாவி என்றுதான்
நினைத்துவிட்டதோ?

டயானா அடர்ந்த காட்டுக்குள் வந்துவிட்டாள்.
வெகு தூரம்
வந்துவிட்டேன்
போலிருக்கிறதே?
மாயாவி வருமுன்
திரும்பிவிட
வேண்டும்!

அப்போது ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது.
ஆ ! நடுக்காட்டில் வெளிச்சம் !!


ஏதோ சத்தம் கேட்கிறது... என் துப்பாக்கிக்கு வேலை !
பாங்கு காவலாளிகளைச் சுட்டுக் கொன்றது போதும். காட்டுக்குள் யாரும் வரமாட்டார்கள் !


வங்கிக் கொள்ளையர்கள்...
காவலாளிகளைக் கொன்றுவிட்டு, கொள்ளை அடித்து வந்திருக்கிறார்கள்.
வெம்பசியில் திருவிழா முடிந்தது. மாயாவி கிளம்பினார்.
விரைவில் மீண்டும் வாருங்கள்!
கட்டாயம் வருகிறேன்!
டெவில் எங்கே? குகைக்குப் போய்விட்டதா?

டெவில் முயல் வேட்டைக்குக் கிளம்பிவிட்டது!

ஒரு முயலை விரட்டிக்கொண்டு ஓடியது!
ஆ... நாய்!

ஏதோ சத்தம் கேட்கிறது என்று சொன்னேன் அல்லவா?
நாயை சுடப் போகிறாயா? அது காட்டில் அலையும் நாய்!
டெவில், டயானாவிடம் ஓடியது.
உஸ்... குரைக்காதே! எங்கேயிருந்து வருகிறாய்? மாயாவி எங்கே?

அவர்கள் வேலை முடித்துப் போகட்டும்! நாம் அங்கே போவோம்!


இப்போது கூட சத்தம் கேட்கிறது!
உன் இதயத் துடிப்பாக இருக்கும்!
பணப்பெட்டியைப் புதைத்த இடத்தை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

கொள்ளையர்கள் போனதும் டயானா அங்கே வந்தாள்.
என்ன புதைத்தார்கள்? பணப்பெட்டி போலிருந்தது. மாயாவி வந்துதான் தோண்டிப் பார்க்க வேண்டும்! ஓ... ஒரு மண்வெட்டியை விட்டுப் போய்விட்டார்களே!

டயானா மண்வெட்டியை எடுத்துத் தோண்டினாள்.
நானே கண்டுபிடித்தால், மாயாவி பாராட்டுவார்!


ஒரு மண்வெட்டியை விட்டுவிட்டோமே?
யாராவது அதைப் பார்த்தால், இங்கே யாரோ மண்ணைத் தோண்டியிருக்கிறார்கள் என்று சந்தேகப் படுவார்கள். போய் எடுத்து வந்துவிடு!
மண்வெட்டிதானே, போகிறது!


மண்வெட்டியை எடுக்க வந்தான்.
ஆ... யாரது?
டெவில்! நில்!!

டெவிலை சுட்டான்!
டுமீல்...!

துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓடிவந்தார்கள்!
ஆ...! யாரது?
நாம் பணப்பெட்டியைப் புதைத்த இடத்தை இவள் தோண்டிக் கொண்டிருந்தாள்!

யார் நீ?
நான்... நான் முகமூடி மாயாவி!

நாயைச் சுட்டேன்! நொண்டிக்கொண்டு புதருக்குள் ஓடியது!
எங்காவது செத்து விழுந்திருக்கும்!


குண்டு பட்ட டெவில் நொண்டி நொண்டி நடந்தது!


அதேநேரம் மாயாவி மண்டை ஓட்டுக் குகைக்குத் திரும்பினார்.
டெவில் இங்கே வந்ததா? டயானா எங்கே?
தெரியவில்லையே!

காட்டில்...
இவள் மாயாவி என்கிறாளே? மாயாவி ஆண் அல்லவா?
அந்த ஆராய்ச்சியைப் பிறகு வைத்துக் கொள்ளுவோம்!

AswiKumar

யார் நீ? இரகசியப் பெண் போலீசா?
இல்லை... இல்லை... இல்லை...
நாங்கள் வங்கியைக் கொள்ளையடித்தது உனக்குத் தெரியுமா?
உன்னோடு வேறு யாரும் வந்தார்களா?

இனி பெட்டியை இங்கே விட்டுப்போவது நல்லது அல்ல!
தோண்டி எடுப்போம்! வேறு இடத்தில் வைப்போம்!

பெட்டியை எடுத்துக்கொண்டார்கள்.
மீண்டும் தூக்குகிற வேலை!
பணப்பெட்டி ஒரு சுமையா? அந்தப் பெண்ணையும் சேர்த்துத் தூக்கிப் போகலாம்!
இவளை என்ன செய்வது என்று பிறகு முடிவு செய்வோம்!


காரில் கிளம்பினார்கள்.
இவளைக் கொன்று விடுவதுதான் சரி!
ஏற்கனவே செய்த கொலைகள் போதும்! இவள் அழகா இருக்கிறாள்!

டயானாவைக் காணோம்... டெவிலையும் காணோம்... இருவரும் ஒன்றாகப் போயிருப்பார்களா?
காட்டுக்குள் போய்த் தேடிப் பார்க்க வேண்டும்!


முகமூடி தேடிப் போனார். எதிரில் டெவில் வந்தது.
ஆ... காயம்! எப்படி ஏற்பட்டது? டயானா எங்கே?


டெவிலை குகைக்குத் தூக்கி வந்து, மருந்து வைத்து கட்டினார்.
குரானா! டெவிலைப் பார்த்துக் கொள். நான் டயானாவைத் தேடிவிட்டு வருகிறேன்.

இரத்தத் துளிகள்... இதைத் தொடர்ந்து போனால், ஏதாவது துப்புக் கிடைக்கும்! ஹீரோ, ஓடி வா!


அதேநேரம் கொள்ளையர்கள், டயானாவைக் காரில் கொண்டுபோய்க்கொண்டிருந்தார்கள்.
என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்?
அதோ ஒரு குகை தெரிகிறது, பார்?
அது பாதுகாப்பான இடம் போலத் தெரிகிறது!


குகை அருகே காரை நிறுத்தி இறங்கினார்கள்.
இங்கே மறைத்து வைத்தால் யாருக்கும் தெரியாது!
இந்தப் பெண்ணையும் இங்கேயே அடைத்து வைத்துவிடலாம்!


டயானாவின் வாயைக் கட்டினார்கள்.
நீ உள்ளே இருந்து எங்கள் பெட்டியைப் பாதுகாத்துக்கொள்!

டயானாவை உள்ளே போட்டு குகை வாயிலை அடைத்தார்கள்!
அவள் என்னவோ மாயாவி என்றாளே?
முதலில் வேலையை முடி! பிறகு பேசுவோம்!!

டயானாவை பணப்பெட்டியுடன் சேர்த்துக் குகைக்குள் கட்டிப்போட்டிருந்தார்கள்.
மாயாவிக்கு சாவு இல்லை என்பார்கள். நீதான் மாயாவி என்றால், அதை உறுதிப்படுத்து!


சீக்கிரம் வேலையை முடியுங்கள்!


இதுதான் கடைசிக் கல்!


வேலையை முடித்து கொள்ளைக்காரர்கள் வேகமாகக் கிளம்பிவிட்டார்கள்!
நாம் திரும்பி வருமுன் அந்தப் பெண் செத்துவிடுவாள்!
ஆனால், நம் பணம் பத்திரமாக இருக்கும்!


டயானா வருந்தினாள்.
விளையாட்டு வினையாகிவிட்டதே! என்னைக் காணாது மாயாவி தவிப்பாரே... இங்கேயே நான் சாகவேண்டியதுதானா!


அதேநேரம் மாயாவி காடு முழுக்கத் தேடினார்.
இரத்தம் கொட்டியிருக்கிறது!


இங்கே இரத்தம் இல்லை... இங்கேதான் யாரும் டெவிலை சுட்டிருப்பார்களோ... என்ன நடந்தது? டயானா எங்கே?


கால் தடம் தெரிந்தது.
பெரிது பெரிதாக பூட்சு தடம்... சிறிய தடம்... இது டயானாவின் கால் தடமாக இருக்குமோ?

குகைக்குள் வவ்வால்கள் பறந்தன!
எனக்கு வவ்வால்கள்தான் துணையா? பாவம், அவையும் வெளியே பறக்க முடியாது!


மாயாவி விரைந்தார்.
கார் போன தடம்... ஹீரோ, பறந்து போ!


இங்கே கார் நின்றிருக்கிறது... எண்ணெய் வடிந்திருக்கிறதே...

யாரது... யாராவது இங்கே இருக்கிறீர்களா?

ஆ! மாயாவியின் குரல்! என்னைக் காப்பாற்ற வந்துவிட்டார்!


டயானாவைக் காரில் கடத்திப்போயிருப்பார்களோ? வேகமாப் போ, கண்டு பிடிப்போம்!


பதில் குரல் கொடுக்க என்னால் முடியவில்லையே! வவ்வால்களே! நீங்களாவது தூது செல்லுங்கள்!


ஹீரோ ஓடாமல், தகராறு செய்தது!
ஹீரோ! என்ன இது? உன்னை வேகமாகப் போகச் சொன்னேன்!


என்ன இது... என்னையே குப்புறத் தள்ளிவிடும் போலிருக்கிறதே!


மாயாவி கீழே விழுந்தார்.
ஹீரோ என்ன சொல்லுகிறது?


மாயாவி எழுந்து வந்தார்.
குகைக்குள் போக வேண்டுமா?


குகையை மூடியிருந்த கற்களை மாயாவி அகற்றினார்.
இதைத்தானே செய்யச் சொன்னாய்?


குகைக்குள் எட்டிப் பார்த்தார்!
அதோ டயானா! அதுதான் ஹீரோ இந்தக் கலாட்டா செய்திருக்கிறது!


மாயாவி குகைக்குள் வந்தார்.
டயானா! இங்கே எப்படி வந்தாய்?
கொள்ளைக்காரர்கள் பிடித்து வந்து அடைத்தார்கள்!


நன்றியுள்ள பிராணி! நன்றி ஹீரோ நன்றி!
நீ உள்ளே இருப்பதை ஹீரோதான் எனக்குக் காட்டியது!

என் உடைகளை எடுத்து அணிந்துகொண்டு ஏன் வந்தாய், டயானா?
போர் அடித்தது! வேடிக்கையாக உங்கள் உடைகளை அணிந்து கொண்டு வெளியில் கிளம்பினேன்!

மூன்று பேர் சேர்ந்து இந்தப் பெட்டியைப் புதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்!
ஆ! அத்தனையும் பணம்! தங்கக் கட்டிகள்!!

இருவரும் சேர்ந்து கற்களை அகற்றினார்கள்.
நகர வங்கியில் கொள்ளையடித்த பணமாக இருக்கும்! அங்கே கொள்ளையர்கள் ஒரு காவலாளியைச் சுட்டுக் கொன்றுவிட்டதாகக்கூடக் கேள்விப்பட்டேன்!
நான் அழகாக இருந்ததால் தப்பித்தேன்!



மாயாவி பெட்டியை வெளியே இழுத்து வந்தார்.
இதை வங்கிக்கு அனுப்ப வேண்டும்! கொள்ளையர்களையும் பிடிக்க வேண்டும்!



கொள்ளையர்கள் ஊரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.
அந்தப் பெண் அழகாக இருந்தாள்! பாவம், செத்துப்போவாள்!
அவள் உயிரைவிட நம் உயிர் பெரிது!

மாயாவி காட்டுவாசிகளை அழைத்து, குகை வாயிலை அடைத்தார்.
முன்பு இருந்தது போல அடைத்துவிட வேண்டும்!


பெட்டியைத் தூக்கிக்கொண்டார்கள்.
பெட்டியை நகர வங்கியில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்!
நாங்கள் சேர்த்து விடுகிறோம்! நீங்கள் கொள்ளைக்காரர்களைத் தேடுங்கள்!!


கொள்ளைக்காரர்கள் எங்கே போயிருப்பார்கள்?
கார் தடத்தைத் தொடர்ந்து போனால், கண்டுபிடித்து விடலாம். நீயும் என்னுடன் வந்து, அவர்களை அடையாளம் காட்டு!


நகரத்துக்குப் போனதும் நான் மதுக்கடைக்குப் போவேன்!
நான் என் காதலியின் வீட்டுக்குச் செல்லுவேன்!
கொஞ்சம் காரை நிறுத்து!


உல்லாசமாக இருக்க உங்களிடம் பணம் இருக்கிறதா?
அச்சச்சோ! அதை மறந்துவிட்டோமே!
போலீசை நினைத்துக் கொண்டிருந்ததில், எல்லாவற்றையும் மறந்துவிட்டோம்


காரைத் திருப்பு!
இப்போது நாம் இலட்சாதிபதிகள். ஏன் பிச்சைக்காரர்கள் போல இருக்க வேண்டும்?
கொள்ளையடிப்பது உல்லாசமாக செலவழிக்கத்தானே! பணத்தை மறைத்து வைக்க அல்ல!!


அதேநேரம் மாயாவி, கொள்ளையரைத் தேடி வந்துகொண்டிருந்தார்.
அவர்கள் ஊருக்குள்தான் போயிருக்க வேண்டும், டயானா!
ஒரு கார் வருவது போல சத்தம் கேட்கிறது!


சீக்கிரம்
காட்டுக்குள் போ!


ஒரு புதரில் இருவரும் மறைந்துகொண்டார்கள்.
ஆ! அவர்கள்தான் கொள்ளைக்காரர்கள்!!
நமது அதிருஷ்டமே அதிருஷ்டம்! குகைக்குத்தான் திரும்பி வருகிறார்கள்!

அந்தப் பெண்ணை நம்மோடு அழைத்துப் போய்விடலாமா?
முதலில் குகையைத் திறப்போம்!
அதற்குக் கற்களை அப்புறப்படுத்த வேண்டும்!

கற்களை அப்புறப்படுத்தினார்கள்.
அந்தப் பெட்டியைக் காணோம்!
அந்தப் பெண்ணையும் காணோம்!
குகை மூடியபடி இருந்ததே! உள்ளே போய்ப் பார்ப்போம்!


மூவரும் குகைக்குள் வந்தார்கள்.
அங்கே பார்!
மண்டை ஓடு!

அது மாயாவியின் அடையாளம்! ஆபத்து! வாருங்கள், ஓடிவிடுவோம்!
அப்படியானால் அந்தப் பெண் மாயாவிதானா?


திடீர் என்று மாயாவி தோன்றினார் !
அடுத்து எந்த வங்கியில் கொள்ளை ?
!!!?

அவள் பெண்... இவன் ஆண்... மாயாவி ஆணா ? பெண்ணா ?
அந்த ஆராய்ச்சி இப்போது தேவையா ?


துப்பாக்கிகளை வெளியே எறிந்துவிட்டு, மூன்று பேரும் வெளியே வாருங்கள்!
நீ உள்ளே வா!

நான் உள்ளே வந்தால் நீங்கள் ஒருவர்கூட உயிர் பிழைக்க முடியாது!
அவர்களை உயிருடன் பிடித்து போலீசில் ஒப்படைக்க வேண்டும்!

உங்களை உள்ளே வைத்து, வாசலை மூடிவிடட்டுமா? அந்தப் பெண்ணை அப்படித்தானே செய்தீர்கள்?


முழுக்க அடைத்துவிடுவான் போலிருக்கிறதே?
நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்!


வவ்வால் எச்சம், ஒரே நாற்றம்!
இந்த நாற்றத்திலேயே நாம் செத்துப் போவோம்!


திறந்துவிடு ! நாங்கள் வெளியே வருகிறோம் !
துப்பாக்கிகளை வெளியே வீசுகிறோம் !

மாயாவி கொஞ்சம் திறந்தார்.
ஓகே !
முதலில் துப்பாக்கிகளை வெளியே போடுங்கள் !

துப்பாக்கிகளை எறிந்துவிட்டு, ஒவ்வொருவராக வெளியே வந்தார்கள்.
அந்தப் பெண்ணும் நிற்கிறாள் !
நீ எப்படி வெளியே வந்தாய் ?

ஒருவன் கைத்துப்பாக்கியை எடுக்க...
டுமீல்...!
ஆ...!
என்னிடமும் துப்பாக்கி இருக்கிறது!


மூவரும் காரில் ஏற்றப்பட்டார்கள்.
கார் மெதுவாக வரட்டும்!
நீ எப்படி வெளியே வந்தாய்? அந்த இரகசியத்தைச் சொல்லேன்!
வவ்வால்கள் என்னை வெளியே தூக்கி வந்தன!


மாயாவி, காட்டுவாசிகளைச் சந்தித்தார்.
இவர்கள்தான் கொள்ளைக்காரர்கள் இவர்களை போலீசில் ஒப்படையுங்கள்!
காரிலேயே போகிறோம்!


காட்டுவாசிகளும் காரில் ஏறிக்கொண்டார்கள்.
எல்லாரும் வில் – அம்பு வைத்திருக்கிறார்களே!
விஷம் தடவிய அம்புகள், கவனம்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த காமிக்ஸ்

இரத்தம் குடிக்க வருகிறான் ஒருவன்

கன்னி வேட்டை

அதி பயங்கர வண்ணப் படக்கதை !

ஏப்ரல் 1-ந்தேதி வெளிவருகிறது

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd.with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

March 16, 2003.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி
வழங்கும்
வெள்ளி தோறும்
சிறுவர் தங்கமலர்

★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
★ புராண படக்கதை
★ துப்பறியும் படக்கதை
★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
★ சிறுகதைகள்
★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்
வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்
உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்